# 2009 மே 18 இல் சரணடைந்தவர்களின் பட்டியலை ஒப்படைக்குக! சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் வலியுறுத்து




2009 மே மாதம் 18 ஆம் திகதி சரணடைந்தவர்களின் பட்டியலை ஒப்படைக்குமாறு 58 ஆவது படைப்பிரிவுக்குக் கட்டளையிட வேண்டும், என மனித உரிமைகள் சட்டத்தரணியும் செயற்பாட்டாளருமான யஸ்மின் சூக்கா தலைமையிலான சர்வதேச உண் மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் வலியுறுத்தி யுள்ளது.

இராணுவத்தின் 58, 59 ஆம் மற்றும் 53 ஆம் படைப்பிரிவுகளின் கட்டளைத் தளபதிகள் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தினால் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தவும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பாக தாம் சிரத்தையுடன் செயற்படுவதை நிரூபிப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் என்றும் அது கூறியுள்ளது.

2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 10 வெள்ளிக்கிழமை 27.10.2023 கதிர் 101

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

## பலஸ்தீன மக்களுக்கு ஆதரவு யாழ்ப்பாணத்தில் போராட்டம்



2 ➤

## யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் குருதித் தட்டுப்பாடு!

யாழ்ப்பாணப்போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் அனைத்து வகையான குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

விபத்துக்கள், சத்திரசிகிச்சைகள், குருதிச்சோகை நோயாளர்கள், புற்று நோயாளர்கள் மற்றும் குருதி தேவைப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வைத்தியசாலையில் அதிகரித்து செல்கின்றமையால் இரத்த வங்கியால் விநியோகிக்கப்படுகின்ற குருதியின் அளவும் கூடிக் கொண்டே செல்கின்றதாக இரத்த வங்கியினர் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்கள், இந்த அதிகரிப்பிற்கு ஏற்ப குருதிக் கொடையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. இதனால் இரத்த வங்கியில் எல்லா வகை குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நாம் பல இடங்களுக்குச் சென்று குருதியைச் சேகரித்தாலும் குறிப்பிட்ட சில காலங்களில் குருதியின் கையிருப்பு குறைந்தளவிலேயே காணப்படுகின்றது.

எமது இரத்த வங்கியில் 2 ➤



## இந்திய மீனவரின் விளக்கமறியல் நவம்பர் 8 ஆம் திகதி வரை நீடிப்பு

இலங்கைக் கடற்பகுதியில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 12 பேரையும் நவம்பர் 8 ஆம் திகதி வரை 2 ➤

## பொலிசார் ஏன் அம்பிட்டிய சுமண தேரருக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்கவில்லை?

### எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. கடிதமூலம் கேள்வி



வன்முறை, இன மற்றும் மத வெறுப்புணர்வைத் தூண்டுவதை நோக்கமாகக் கொண்டு அம்பிட்டிய சுமண தேரரால் அண்மையில் வெளியிடப்பட்ட கருத்துத் தொடர்பாக பொலிஸ் மா அதிபருக்கு நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் இன்றையதினம் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில், கடந்த சில நாட்களாக மங்களராமய அம்பிட்டிய சுமண தேரரின் பகிரங்கமான அறிக்கைகள் ஊடகங்களில் மிக அதிக 2 ➤



## கொழும்பில் பாரிய தீ விபத்து 23 பேர் வைத்தியசாலையில்!

கொழும்பு, புறக்கோட்டை 2ஆம் குறுக்குத் தெருவில் உள்ள ஆடையகத்தில் இன்று காலை ஏற்பட்ட தீ விபத்தில் 23 பேர் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். 2 ➤

## மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து கறுப்புக் கொடிப் போராட்டத்திற்கு அழைப்பு!



மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்து வீடுகளிலும் வர்த்தக நிலையங்களிலும் புனித ஸ்தலங்களிலும் கறுப்புக்கொடி ஏற்றுமாறு பொது மக்களிடம் கோரிக்கை விடுப்பதாக மின்சாரப் பாவனையாளர் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க தெரிவித்துள்ளார்.

இன்று முதல் எதிர்வரும் நவம்பர் 20 ஆம் திகதி வரை இதனை நடைமுறைப்படுத்துமாறும் பொதுமக்களை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

நாளை போயா தினத்தன்று இரவு 7 மணி முதல் 7.30 வரை அரை மணி நேரம் மின் விளக்குகளை அணைக்குமாறும், இதன் மூலம் 2 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## யாழ்ப்பாணத்தில் ஆசிரியர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்



ஆசிரியர்களின் உரிமைகளைக் கோரிய போராட்டம் ஒன்று இன்று யாழ்ப்பாணம் சென்ஸ்.சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பில் அதிபர்கள், ஆசிரியர்கள் மீது தண்ணீர்த் தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமையையும் மற்றும் உரிமைகளை அடக்குகின்ற அரசாங்கத்தின் செயல்பாடுகளை எதிர்த்தும் குறித்த போராட்டம் இன்று பாடசாலை நிறைவடைந்ததன் பின்னர் முன்னெடுக்கப்பட்டது.

சுபோதினி அறிக்கையின்படி சம்பளத்தினை அதிகரிக்க வேண்டும், ஆசிரியர்களின் உரிமைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்!, என கோரிக்கைகளை முன்வைத்து பதாகைகளைத் தாங்கியவாறு அமைதியான முறையில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. இதேபோன்ற போராட்டங்கள் யாழ்ப்பாணத்தில் மேலும் சில பாடசாலைகளிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (01)

## 2009 மே 18 இல் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தினால் இது குறித்து அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கமானது சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்துவதற்காக வலிந்து காணாமலாக்கப் பட்டோர் விவகாரத்தை உரியவாறு கையாள்வதாகப் பாசாங்கு காட்டுவதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விசாரணைகளை மேற்கொள்வதற்கென அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் ஆணைக்குழுக்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதியையோ அல்லது ஆறுதலையோ பெற்றுத்தரவில்லை என்றும் அது அடையாளப்படுத்தியுள்ளது. (04)

## பலஸ்தீன மக்களுக்கு ஆதரவு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் இன்றைய தினம் பலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவித்து முஸ்லீம் மக்கள் கவனவீர்ப்புப் போராட்டமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இன்று மதியம் இடம்பெற்ற ஜும்மா தொழுகையினைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் ஐந்து சந்தி வரை பேரணியாகச் சென்று கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் அனைத்து பள்ளிவாசல் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற போராட்டத்தில் சர்வதேசச் சட்டங்கள் இஸ்ரேலுக்கு பொருந்தாதா?, அமெரிக்காவின் குழந்தை இஸ்ரேலே தாக்குதலை உடன் நிறுத்து! - போன்ற வாசகங்கள் மும்மொழிகளிலும் அடங்கிய அட்டைகள் போராட்டக்காரர்களால் தாங்கப்பட்டிருந்தன.

## யாழ்ப்பாண போதனா .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

330 பைந்த் குருதி குறையாமல் இருக்க வேண்டும். ஆனால் தற்போது இருக்கும் குருதியின் அளவு 238 பைந்த் ஆகும். இது ஆபத்தான நிலையாகும். இதனால், நோயாளர்களுக்கு தேவையான குருதியை எம்மால் வழங்க முடியாமலுள்ளது.

ஓர் அனர்த்தம் நிகழுமாயின் அதனால் ஏற்படும் குருதியிழப்பை ஈடுசெய்வதற்கு எம்மால் முடியாமல் போகலாம்.

ஆகவே, இந்த நிலைமையைக் கவனத்தில் கொண்டு பொதுமக்கள் இரத்ததானம் செய்வதற்கு முன்வருமாறு கேட்டுக்கொள்கின்றோம், என தெரிவித்துள்ளனர்.

மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள 077210 5375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## இந்திய மீனவரின் விளக்கமறியல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் இன்று உத்தரவிட்டார்.

நெடுந்தீவு அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் மூன்று படகையும் அதிலிருந்த 12 மீனவர்களையும் இம்மாதம் 14 ஆம் திகதி கைது செய்தனர்.

அந்த மீனவர்கள் ஊர்காவல்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, அவர்களை இன்று (27) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணை மீளவும் இன்று நீதிவான் ஜஜநிதிபாலன் முன்னிலையில் எடுக்கப்பட்ட போது, 12 மீனவர்களின் விளக்கமறியலையும் நவம்பர் 8 ஆம் திகதி வரை நீடிக்க உத்தரவிடப்பட்டது. (அ)

## பொலிசார் ஏன் அம்பிட்டிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவில் விளம்பரப்படுத்தப்பட்டதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அம்பிட்டிய சுமண தேரர், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனையும் நாட்டின் தென்பகுதியில் வாழும் அனைத்துத் தமிழர்களையும் துண்டு துண்டாக வெட்டிவிடுவேன்!, என்று வெளிப்படையாக மிரட்டிச் சென்றுள்ளார் என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, இது அப்பட்டமாக 2007 ஆம் ஆண்டின் ஐசிசிபிஆர் சட்டத்தின் 56 ஆம் பிரிவு 3(1) மற்றும் (2) ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். ஏன் பொலிசார் குறித்த தேரருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை? - எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தின் பிரதி சபாநாயகருக்கும் ஊடகங்களுக்கும் பிரதியிடப்பட்டுள்ளது. (01)

## மின் கட்டண அதிகரிப்புக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்துக்கு தமது எதிர்ப்பைத் தெரிவிக்குமாறும் மக்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி புதன்கிழமை கொழும்பு - குருநாகல் பஹ வீதியில், திவுலப்பிட்டி பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாக காலை 8 மணிக்கு மின் பாவனையாளர் சங்கம் மற்றும் வெகுஜன அமைப்புக்கள் இணைந்து எதிர்ப்புப் பேரணியை ஆரம்பிக்கவுள்ளன என்ற தகவலையும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த பேரணி திவுலப்பிட்டியில் இருந்து கொழும்பில் அமைந்திருக்கும் பிளவர் வீதியில் உள்ள மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுவரை செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (க)

## கொழும்பில் பாரிய தீ விபத்து ......





(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிகாயம் மற்றும் கடும் புகையால் ஏற்பட்ட சுவாச கோளாறு காரணமாக பாதிக்கப்பட்ட 23 பேரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் மூவருக்கு 'ஒட்சிசன்' வழங்கப்படுகின்றது.

இன்று காலை தீ பரவல் ஏற்பட்டதைடுத்து தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தன.

கடும் போராட்டத்துக்கு மத்தியில் தீ பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

தீ விபத்தில் பல வர்த்தக நிலையங்கள் சேதமடைந்துள்ளதாகவும், காயமடைந்தவர்களில் 6 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறித்த ஆடை வர்த்தக நிலையத்தில் காலை சமய வழிபாட்டின் போது ஏற்றப்பட்டிருந்த கற்பூரத்தின் ஊடாக தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளதாகப் பொலிசார் குறிப்பிட்டுள்ளனர்.







## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799



உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட




காலைக்கதிர் TV YouTube தளம்

# பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு உளநலம் தொடர்பிலான செயலமர்வு



(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான உளநலம் தொடர்பான செயலமர்வொன்று பிரதேச செயலக மண்டபத்தில் இன்று இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம்பெற்ற குறித்த செயலமர்வில் வளவாளராக கிண்ணியா தள வைத்தியசாலை உளநலப் பிரிவின் வைத்தியர் ஏ.கே.எம்.நஸ்மி கலந்து கொண்டார்.

உளநலப் பாதிப்பு மற்றும் மன அழுத்தத்தில் இருந்து விடுபடுவதற்கான தீர்வுகள் தொடர்பிலும் இதன் போது விழிப்புணர்வூட்டப்பட்டது.

இதில், உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் மற்றும் சக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# “டக் டிக் டோஸ்” இசை வெளியீடு!



“டக் டிக் டோஸ் “ முழு நீள திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா அண்மையில் யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இலங்கையில் குறிப்பிடத்தக்க இளம் இயக்குநர்களில் ஒருவரான ராஜ் சிவராஜ் இயக்கத்தில் பூவன் மதீசனின் இசையமைப்பில் உருவாகியுள்ள இந்தத் திரைப்படம் மிக விரைவில் திரைக்கு வரவுள்ளது.

இவர்களின் கூட்டணியில் வெளியான “புத்தி கெட்ட மனிதர்கள் எல்லாம்” திரைப்படம் பலரின் பாராட்டுக்களைப் பெற்றிருந்தது. அத்துடன் வணிக ரீதியாகவும் பெரு வெற்றியை அடைந்திருந்தது.

இந்நிலையில், மீண்டும் இவர்களின் கூட்டணியில் வெளியாகவுள்ள “டக் டிக் டோஸ்“ முழு நீளத் திரைப்படத்திற்கு எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ளது. (01)

# பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் இரத்ததான முகாம் நடைபெற்றது



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இணைந்து நடாத்திய இரத்ததான முகாம் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9 மணிக்கு, “இரத்தானம் செய்வோம் இன்னுமோர் உயிர் காப்போம்” எனும் தொனிப்பொருளில் இந்த முகாம் ஆரம்பமாகி நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக குறித்த இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த இரத்ததான முகாமில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அங்கத்தவர்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் பங்கேற்று இரத்ததானம் வழங்கினர். (02)

# புதிதாய்ப் பிறந்த சிசுக்களுக்கான சிகிச்சை இயந்திரம் அன்பளிப்பு




புதிதாய்ப் பிறந்த சிசுக்களுக்கான அதி திவிர சிகிச்சை பிரிவிற்கு (NICU) 12.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான Neonatal ventilator (High Frequency) Fabian HFOi இயந்திரத்தினை தொழிலதிபர் எஸ்.கே.நாதன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்பு செய்தார்.

இந்த இயந்திரத்தைக் கையளிக்கும் நிகழ்வில் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி உள்ளிட்ட வைத்தியர்கள், தாதியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் என்போர் கலந்து கொண்டனர். (01)



# செயற்கை நுண்ணறிவுப் பாதுகாப்பு நிறுவன தலைமையகமாக இங்கிலாந்து செயல்படும்

## பிரித்தானியப் பிரதமர் ரிஷி சுனக் கருத்து




உலக செயற்கை நுண்ணறிவு பாதுகாப்பு உச்சி மாநாடு அடுத்த வாரம் பிரித்தானியாவில் நடைபெற இருக்கிறது. இந்நிலையில் பிரித்தானியப் பிரதமராக ஓராண்டை நிறைவு செய்திருக்கும் ரிஷி சுனக் செயற்கை நுண்ணறிவு குறித்த தனது கருத்துகளை தெரிவித்தார்.

தொழிற்புரட்சி, மின்சாரம் கண்டுபிடிப்பு, இணையத்தின் தோற்றம் போல செயற்கை நுண்ணறிவு கண்டுபிடிப்பும் உலகில் மிகப்பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என நம்புகிறேன்.

புதிய வகை செயற்கை நுண்ணறிவு கருவிகளை ஆய்வு செய்வதிலும், சோதனை செய்வதிலும் இங்கிலாந்து முன்னணியில் இருப்பதால், உலகின் முதல் செயற்கை நுண்ணறிவு பாதுகாப்பு நிறுவனத்தின் தலைமையகமாக பிரித்தானியா விளங்கும்.

செயற்கை நுண்ணறிவானது பல்வேறு முன்னேற்றங்களை வழங்கும் அதே சமயம் பல்வேறு ஆபத்துகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

இரசாயன அல்லது உயிரியல் ஆயுதங்களை உருவாக்குவதை செயற்கை நுண்ணறிவு எளிதாக்கும். பயங்கரவாதக் குழுக்கள் இதனைப் பயன்படுத்தி பெரிய அளவில் அழிவைப் பரப்ப முயற்சிக்கலாம். இத்தகைய கடும் சவால்களையும் நாம் எதிர்கொண்டாக வேண்டும், என்று அவர் எனத் தெரிவித்திருக்கிறார்.

அதன்பின்பு முதல் செயற்கை நுண்ணறிவுப் பாதுகாப்பு நிறுவனம் பற்றிய தகவலை வெளியிட்ட ரிஷி சுனக், இந்த நிறுவனம் செயற்கை நுண்ணறிவு குறித்த உலகின் அறிவை மேம்படுத்தும். மேலும் இது புதிய ஏஐ வகைகளை கவனமாக ஆய்வு செய்து, சோதிக்கும், எனவும் கூறினார். (04)

# சீனாவின் முன்னாள் பிரதமர் மாரடைப்பால் காலமானார்




சீனாவின் முன்னாள் பிரதமர் லீ கெகியாங் (68) திடீரென மாரடைப்பால் காலமானார் என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுக்களின் அரசியல் பணியகத்தின் நிலைக்குழு உறுப்பினரும் முன்னாள் பிரதமருமான லீ கெகியாங், ஷாங்காய் நகரில் இன்று அதிகாலை காலமானார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

லீ கெகியாங் பத்து ஆண்டுகள் சீனாவின் பிரதமராகப் பணியாற்றியுள்ளார். பிரதமராக இருந்த காலத்தில் தனது கடினமான தருணத்தில் சக ஊழியர்களுடனும் ஒரு நவீன துறைசார் நபராக வலம் வந்தார். அவர் சீர்திருத்த எண்ணம் கொண்ட ஓர் அதிகாரத்துவ வாதியாக அடையாளப்படுத்தப்படுகிறார்.

பிரதமர் பொறுப்பில் இருந்து விடைபெறும் போது 800 அல்லது அதற்கு மேற்பட்ட மூத்த அரசு அதிகாரிகளிடம் - மனிதர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை சொர்க்கம் பார்க்கிறது. வானமே அதனுடைய கண்கள், என்று லீ கூறியிருந்தார்.

நாட்டிற்கு பங்களிக்கும் லட்சியத்துடன் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்த லீ, ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் அனைத்து அதிகாரமும் உள்ள பொலிட்பீரோ நிலைக்குழுவில் இருந்து கடந்த ஒக்டோபரில் வெளியேறிய ஒரு வருடத்திற்குள் மாரடைப்பால் காலமானார். அவரது மறைவுக்கு பல தலைவர்களும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (04)

# அமெரிக்க துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் கொலையாளி முன்னாள் ராணுவ வீரரா?

## பொலிசாரின் தேடுதல் தீவிரம்

அமெரிக்க துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட கொலையாளி, முன்னாள் ராணுவ வீரர் என்றும், அவர் மனநலப் பிரச்சினைக்கு சிகிச்சை எடுத்து வந்தவர் என்றும் முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் மெய்னே நகரில் மூன்று இடங்களில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 22 பலியான நிலையில், கொலையாளியைக் காவல்துறையினர் தேடி வருகிறார்கள்.

பாதுகாப்புக் கருதி, அப்பகுதியின் குடியிருப்பாளர்கள் அனைவரும் வீடுகளைப் பூட்டிக்கொண்டு உள்ளேயே இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் மெய்னே நகரில் உள்ள லூயிஸ்டன் பகுதியில் அமைந்திருக்கும் உணவகம், மதுபானக் கூடம், கேளிக்கை விடுதி ஆகியவற்றில் துப்பாக்கிச் சூடு நடத்தியவரின் புகைப்படத்தை வெளியிட்ட காவல்துறை, இவரைப் பற்றிய தகவல்கள் தெரிந்தால் பொதுமக்கள் காவல்துறையை அணுகுமாறு அறிவித்திருந்தனர்.

இந்த நிலையில், அந்த புகைப்படத்தில் இருப்பவரின் அடையாளம் தெரிய வந்துள்ளதாக காவல்துறையின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் ரொபர்ட் கார்ட் (40) என்பதும், இவர் ராணுவப் படையினருக்கு ஆயுதங்களைக் கையாளும் பயிற்சி அளித்து வந்த பொறுப்பில் இருந்ததும், மெய்னே நகரின் சாகோவில் உள்ள பயிற்சி நிலையத்தில் பணியாற்றி



வந்ததும் தெரிய வந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ரொபர்ட், 2023ஆம் ஆண்டு கோடை காலத்தில் இரண்டு வாரங்கள் மனநல சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெற்றிருந்ததாகவும், அவருக்கு எந்த வகையான சிகிச்சை அளிக்கப்பட்டது என்பதற்கான தகவல்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

அவர் ராணுவ பயிற்சி மையத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்போவதாக எச்சரித்திருந்த நிலையில், அவருக்கு மனநல சிகிச்சை அளிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. அவரது தொலைபேசி எண்கள் எதுவும் தற்போது உபயோகத்தில் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# உயிரிழப்பு எண்ணிக்கையில் நம்பிக்கையில்லை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்தார்



காஸா தரப்பு உயிரிழப்பு எண்ணிக்கையில் தனக்கு நம்பிக்கையில்லை என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் படையினர் எல்லை தாண்டி இஸ்ரேல் மீது கடந்த 7 ஆம் திகதி தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, இரு தரப்புக்கும் இடையே போர் தீவிரமடைந்து வருகிறது.

ஹமாஸின் கட்டுப்பாட்டில் உள்ள காஸா மீது இஸ்ரேல் தீவிர வான்வழித் தாக்குதல் மேற்கொண்டு வருவதால் காஸா நகரம் முழுவதும் உருக்குலைந்துள்ளது.

இந்த போரில் காஸா தரப்பில் 7,028 பேர் உயிரிழந்துள்ளதாகவும் இதில் 2,900 பேர் சிறுவர்கள் என்றும் ஹமாஸ் கூறியுள்ளது.

இந்நிலையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், தீவிரவாதக்குழுவான ஹமாஸ் கூறும் உயிரிழப்பு எண்ணிக்கையில் தனக்கு நம்பிக்கையில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய பைடன், இஸ்ரேல் தாக்குதலில் எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள் என பாலஸ்தீனியர்கள் கூறுவதில் நம்பிக்கை இல்லை. ஆனால், அங்கு அப்பாவிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அது ஒரு போரை நடத்துவதற்கான விலை, என்று தெரிவித்திருக்கிறார்.

மேலும், இஸ்ரேலுக்கு எதிரான போரை பிரசாரம் செய்யும் மக்களிடையே இஸ்ரேல் இனி கவனமாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, டில்லியில் அண்மையில் நடைபெற்ற ஜி20 மாநாட்டில் அறிவிக்கப்பட்ட இந்தியா - மத்திய கிழக்கு பொருளாதார வழித்தடத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு எதிராக இஸ்ரேல் மீது ஹமாஸ் ஆயுதப் படையினர் தாக்குதல் நடத்தி இருக்கலாம், என ஜோ பைடன் கூறியது குறிப்பிடத்தக்கது. (04)

# 50 பிணைக்கைதிகள் இஸ்ரேலின் தாக்குதலில் மரணமானதாக ஹமாஸ் அமைப்பு அறிவிப்பு

காஸாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் தங்களால் பிணைக்கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்ட 50 பேர் உயிரிழந்துவிட்டதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் ராணுவப் பிரிவான அல்-காஸம் படையின் செய்தித் தொடர்பாளர் அபு ஒபெய்தா இந்தத் தகவலை நேற்று வெளியிட்டார்.

எனினும், இந்தத் தகவல் அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை. (04)



# சாகாமத்தில் வீடற்றவர்களுக்கு வீடு வழங்க அரச அதிபர் அடிக்கல்

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் உள்ள சாகாமம் கிராம சேவை மீள்குடியேற்றக் கிராமத்தில் வீடற்று வாழ்ந்து வரும் தெரிவுசெய்யப்பட்டுள்ள குடும்பங்களுக்கு, புதிய வீடுகள் வழங்குவதற்காக அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

புதிய வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் திருக்கோவில் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி அனோஜா உஷாந்தின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம கலந்து கொண்டிருந்தார். அம்பாறை மாவட்டச் செயலக பிரதம பொறியிய ளாளர் ஸாஹீர், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள், அபி விருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# 34 வருட அரச சேவையாற்றிய நிருவாக உத்தியோகத்தருக்கு கௌரவிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் இராசையா கணேசமூர்த்தியை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

காரைதீவைச் சேர்ந்த கணேசமூர்த்தி, வவுனியாவில் முகாமைத்துவ உதவியாளர் சேவையில் இணைந்து பின்னர் நாவிதன்வெளி கல்முனை வடக்கு பிரதேச செயலகங்களில் பதில் நிருவாக உத்தியோகத்தராகப் பணியாற்றி, சுப்பரா பரீட்சையில் சித்தி பெற்று திருக்கோவில் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தராகவும் பணியாற்றினார்.



அனைத்து பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் இந்நிகழ்வு இடம்பெற்றது.




# மாணவர் முயற்சியாண்மையை ஊக்குவிப்பதற்கு கிளிநொச்சியில் கட்டுரை, சித்திரப் போட்டிகள்



பாடசாலை மாணவர்களிடையே முயற்சியாண்மைக் கருத்துக்களை ஊக்குவிக்கும் செயற்றிட்டத்தின் கீழ் கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள் நேற்று வியாழக் கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றன. இதன் ஆரம்ப நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் அவர்கள் கலந்துகொண்டு கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

பாடசாலை மட்டத்தில் முயற்சியாண்மைக் கருத்துக்களை எடுத்துக் கூறவேண்டிய சரியான காலகட்டத்தில் குறித்த போட்டித்தொடர் இடம்பெறுகின்றமை சிறப்பான விடயமாகும். ஏனெனில் எதிர்காலத்தில் போட்டிக்களமான தொழில் சூழலை எதிர்கொள்ளப்போகும் நீங்கள் தற்போதிருந்தே உங்கள் மனங்களை அதற்குரிய வழியில் தகவமைத்துக்கொள்ள இத்தகைய செயற்றிட்டங்கள் உதவும், என அவர் தெரிவித்தார்.

அண்மையில் மல்லாவி மத்திய கல்லூரியில் நடைபெற்ற கண்காட்சியின் அம்சங்களையும் அவர் மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் பாடசாலை முயற்சியாளர் ஊக்குவிப்பு வேலைத் திட்டத்தின் கீழ் குறித்த செயற்றிட்டம் நாடளாவிய ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனூடாக கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிகளுள் நடாத்தப்பட்டு அதன் மூலம் முயற்சியாண்மை கருத்துக்கள் தொடர்பான அறிவை வழங்கவும், புதிய முயற்சியாண்மைக் கருத்துகளை உருவாக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்போட்டிகள் கனிஷ்ட பிரிவு தரம் 9 தொடக்கம் தரம் 11 வரையிலான மாணவர்களை உள்ளடக்கிய தாகவும் சிரேஷ்ட பிரிவு தரம் 12 தொடக்கம் தரம் 13 வரையிலான மாணவர்களை உள்ளடக்கியதாகவும் நடத்தப்படுகின்றன. மாவட்ட மட்டத்தில் இடம்பெறும் முதற் போட்டியைத் தொடர்ந்து, தலைமை அலுவலகப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. இப்போட்டியில் பாடசாலை மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

கிளிநொச்சி மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் பாடசாலை மட்டத்தில் முயற்சியாண்மை கலாசாரத்தை ஊக்குவிக்கும் நோக்கில் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ந.இன்பராஜ், கிளிநொச்சி மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ச.சஜீபன் மற்றும் உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களும் கலந்துகொண்டிருந்தனர். (02)

# திருகோணமலை றோட்டரிக் கழகத்தின் உலக போலியோ தின சிறப்பு நிகழ்வு




(ஹஸ்பர்)

திருகோணமலை றோட்டரிக் கழகத்தினால், “உலக போலியோ தினம் 2023” திருகோணமலை மாதுமை அம்பாள் தமிழ் வித்தியாலய மாணவர்கள் மத்தியில் நேற்று நினைவு கூரப்பட்ட்து.

2023 ஆம் ஆண்டு உலக போலியோ தினத்தின் கருப்பொருள் – “தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆரோக்கியமான எதிர்காலம்” என்பதை முன்னிறுத்தி உலக போலியோ நிலைமை மற்றும் சர்வதேச றோட்டரிக் கழகத்தின் போலியோவை உலகில் இருந்து நீக்குவதற்கான செயற்பாடுகள் பற்றிய முக்கிய விபரங்களை டொக்டர் ஞானகுணாளன் வழங்கினார்.

இலங்கையில் இருந்து போலியோ நோய் ஒழிக்கப்பட்ட விதத்தையும் அவர் எடுத்துக்கூறினார்.

திருகோணமலை றோட்டரிக் கழகத் தலைவர் டொக்டர் சௌந்தரராஜன் பாடசாலை நூலகத்திற்கு புத்தகங்களையும் வழங்கினார்.

# அடாவடி செய்யும் அம்பிட்டிய சுமணரத்ன தேரரை ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் கீழ் கைது செய்யவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன்



அம்பிட்டிய சுமணரத்தன தேரரை ஐ.சி.சி.பி ஆர் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள விசேட காணொளிப் பதிவிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சுமணரத்தன தேரரை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் எனக் கோரியுள்ளதோடு, அவருக்கு முதலில் என்ன பிரச்சினை என்பதைக் கண்டறிய வேண்டும் எனவும், மனநோயாளி போல் தமிழர்களை வெட்டுவேன் என பகிரங்கமாகக் கூறுகின்றார் எனவும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

நடைமுறையிலுள்ள ஐ.சி.சி.பி ஆர் சட்டத்தின் கீழ் உடனடியாக அந்த தேரர் கைது செய்யப்பட வேண்டும். ஏனெனில் குறித்த சட்டத்தின் கீழ் ஏற்கனவே சில மதத் தலைவர்கள் கைது செய்யப்பட்ட சம்பவங்களும் இருக்கின்றன என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறு அம்பிட்டிய சுமனரத்தின தேரரை கைது செய்யாவிட்டால் அவர் மீண்டும் மீண்டும் அவ்வாறுதான் நடந்து கொள்வார் எனவும் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு உடனடியாகவே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நாட்டில் சட்டம் அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும், எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

# நவம்பர் 3 இல் வெளிவருகிறது மணல் முழு நீளத் திரைப்படம்

ஈழத்தில் தயாரிக்கப்பட்ட மணல் திரைப்படம் எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி திரையிடப் படவுள்ளது.

திரையரங்குகளில் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே இது திரையிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விசாகேச சந்திரசேகரம் இயக்கத்தில் உருவாகியுள்ள இந்த முழு நீளத் திரைப்படம், ஈழத்தமிழரின் இறுதிப் போர்க்கால சூழலையும் அதனையடுத்து புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளியின் வாழ்விற்கான போராட்டத்தையும் எடுத்துக்காட்டுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.



இத்திரைப்படம், 2023 ஆம் ஆண்டுக்கான சர்வதேச திரைப்பட விழாக்களில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி, 4 சர்வதேச விருதுகளை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி, இலங்கையில் கடந்த காலங்களில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி மற்றும் மின் வெட்டு, எரிபொருள் தட்டுப்பாடு போன்ற சிக்கலான நிலையிலும் விடாமுயற்சியின் காரணமாக இலங்கையில் மணல் திரைப்படம் உருவாகியிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

# இந்த ஆண்டின் செப்டெம்பர் மாதத்தில் மட்டும் 168 சிறுமிகள் துஷ்பிரயோகம், 22 பேர் கர்ப்பம்

## எரான் விக்ரமரத்ன எம்.பி. தகவல்

இந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 16 வயதுக்குட்பட்ட சிறுமிகள் மீதான பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் 168 வரை பதிவாகியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார். இவர்களில் 22 பேர் கர்ப்பமடைந்திருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தத் தகவல்களைப் பகிர்ந்துகொண்டார்.

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தரவுகளின்படி, 2021 ஆம் ஆண்டில் இலங்கையில் 11,000 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. 2022 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ள சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளில் குறைந்தது 41 வீதமானவை பாலியல் துஷ்பிரயோகத்தின் கீழ் வருகின்றன, எனவும் அவர் குறிப்பிட்டார். அந்த வகையில், இந்த ஆண்டு செப்டம்பரில் பதிவான வழக்குகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது, இது அதிகரிப்பைக் காட்டுகிறது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் பருவப் பெயர்ச்சி மழையை எதிர்கொள்வதற்கான முன்னாயத்தக் கலந்துரையாடல்



கிளிநொச்சி மாவட்டத்தில் வடகிழக்கு பருவப் பெயர்ச்சி மழையை எதிர்கொள்வது தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் உரையாற்றுகையில்,

கடந்த இரண்டு வருடங்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள அனர்த்த நிலைகள் குறைவாகவே காணப்படுகின்றன. கடந்த காலங்களில் வெள்ள அனர்த்தத்தைக் குறைப்பதற்காக பல்வேறுபட்டசெயற்றிட்டங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டமை அதிக நன்மையை அளித்துள்ளன.

ஆயினும், அனர்த்த முன்னாயத்த செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொள்வது அவசியமானதாகும். இதற்கு உத்தியோகத்தர்களும் சமூக மட்டமும் இணைந்து செயற்பட வேண்டும். அனர்த்த நிலைகள் குறித்து மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும், எனத் தெரிவித்தார்.

இதன்போது, வடகிழக்கு பருவப் பெயர்ச்சி மழையினால் உண்டாகும் அனர்த்தங்களை எதிர்கொள்ளும் முறைகள் மற்றும் அவற்றைக் குறைப்பதற்கான திட்டமிடல்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறையினருடன் ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், சீரற்ற காலநிலையால் ஏற்படும் பாதிப்புக்களை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடுகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள குளங்கள் உடைப்பெடுக்கும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் மாவட்டத்தில் உள்ள பாரிய குளங்கள் தொடர்பாகவும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

அனர்த்தங்களின்போது மக்களைப் பாதுகாப்பதற்கான மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய முன்னாயத்த நடவடிக்கைகள், டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள், வீதிப்போக்குவரத்து மற்றும் வீதி விபத்து, பாடசாலை மற்றும் வைத்தியசாலைகளில் அனர்த்த குறைப்பு செயற்றிட்டம் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், திணைக்கள அதிகாரிகள், நீர்பாசன திணைக்கள பொறியலாளர்கள், இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், கடற்றொழில் சமாசங்களின் அங்கத்தவர்கள், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள், உத்தியோகத்தர்கள் எனப் பல தரப்பினரும் கலந்து கொண்டனர். (02)



# கிளிநொச்சி ஏ-35 வீதியில் பாடசாலை நேரத்தில் டிப்பர்களை மறித்துப் பொலிசார் சோதனை

## மாணவருக்கு இடைஞ்சல் - விபத்துக்கும் வாய்ப்பு!

கிளிநொச்சி ஏ-35 வீதியினை மாணவர்கள் அதிகளவில் பயன்படுத்தும் பாடசாலை நேரத்தில் டிப்பர் வாகனங்களை பொலிசார் வழிமறித்துச் சோதனையிடுவதனால் மாணவர்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. இதனால், விபத்துக்கள் ஏற்படும் அபாய நிலையும் காணப்படுவதாக எச்சரிக்கப்படுகிறது.




கிளிநொச்சி முரசுமோட்டை ஏ-35 வீதியின் அருகருகே அமைந்துள்ள முருகானந்தா கல்லூரி மற்றும் முருகானந்தா ஆரம்ப வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் சுமார் 700 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்த நிலையில், தினமும் காலை 7 மணி முதல் 7.30 வரையான பாடசாலை நேரங்களில், பாடசாலை வீதிப் பாதுகாப்பில் ஈடுபடும் பொலிசார் குறித்த இரு பாடசாலைகளுக்கு இடையிலும் பாடசாலைகளுக்கு முன்பாகவும் ஏ-35 வீதியால் வரும் டிப்பர் வாகனங்களைத் தொடராக வழி மறித்து பரிசோதிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

டிப்பர் வாகனங்களின் வழியனுமதிப்பத்திரங்களை பரிசோதிப்பதற்காக ஏ -35 வீதி பரந்தன் மற்றும் ஏ-9 வீதி ஆனையிறவு, ஏ -32 வீதி பூநகரி சங்குப் பிட்டி ஆகிய பகுதிகளில் பொலிஸ் சோதனைச் சாவடிகள் இருக்கின்றபோதும் குறித்த இரண்டு பாடசாலைகளுக்கு அருகிலும் குறிப்பிட்ட நேரத்துக்குள் இந்த டிப்பர் வாகனங்களை மறித்துப் பரிசோதிப்பதில் பொலிசார் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

டிப்பர் வாகனங்களை பாடசாலைகளுக்கு முன்னால் வழி மறிப்பதன் காரணமாக மாணவர்களது போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது. தப்பிச் செல்ல முயற்சிக்கும் டிப்பர்கள் மாணவர்களை மோதித் தள்ளிவிட்டுச் செல்லும் வாய்ப்பிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இன்றைய தினமும் காலை வேளையில் குறித்த பாடசாலைகளுக்கு முன்னால் பல டிப்பர் வாகனங்களை மறித்து பொலிசார் சோதனையில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்துள்ளது. (02)

## அரசினால் விற்கப்படும் நிறுவனங்களை வாங்க மக்கள் சார்ந்த பொது நிறுவனம்

இலங்கையிலுள்ள பொது நிறுவனங்களை மறுசீரமைக்கும்போது அந்நிறுவனங்கள் வெளிநாட்டு சக்திகளின் கைகளுக்குள் செல்வதை தடுக்கும் நோக்கில், அவற்றை இலங்கையர்களே கொள்வனவு செய்வதற்கு ஏதுவான மக்கள் நிறுவனமொன்றை நிறுவுவதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு இன்று (27) பிற்பகல் 3 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. இந்நிறுவனம் 'Treasure Republic Guardians' என்று பெயரிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, சரத் பொன்சேகா, பாட்டலி சம்பிக்க ரணவக்க, விஜயதாச ராஜபக்ஷ, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் மற்றும் 30 க்கும் மேற்பட்ட அமைச்சர்கள் உட்பட டீஎஸ்ஜ குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி குலதுங்க ராஜபக்ஷ, பெலவத்தை பால் மா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆரியசீல விக்கிரமநாயக்க, நேச்சர் சீக்ரெட் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சமந்த குமாரசிங்ஹ, அரலிய அரிசி உற்பத்தி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டட்லி சிரிசேன போன்ற வர்த்தகத்துறை தலைவர்கள், அறிஞர்கள் மற்றும் தேசிய அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இவ்வைபவம் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பில் ஸ்ரீலங்கன் விமான சேவையின் சுதந்திர சேவையாளர் சங்கத்தின் செயலாளர் ஜனக விஜயபத்திரத்ன தெரிவிக்கையில், இந்த நிறுவனங்களின் ஒரு பங்கின் விலை ஒரு ரூபாய் எனவும், இலங்கை மக்கள் தமக்கு தேவையான அளவிற்கு இவற்றின் பங்குகளை கொள்வனவு செய்ய வாய்ப்பு உள்ளதாகவும், வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களும் இவ்வாறு பங்குகளை கொள்வனவு செய்ய முடியும் எனவும் தெரிவித்தார். (ரெ-18)

## பாடசாலையில் திருடிய கணினிகளை வீட்டில் ஒளித்து வைத்த மாணவன் கைது

அக்குரஸ்ஸ பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றின் கணினி அறைக்குள் நுழைந்து அங்கிருந்த கணனிகளைத் திருடிய அதே பாடசாலையைச் சேர்ந்த மாணவர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலையின் கணினி அறைக்குள் புகுந்து சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான 2 கணினிகள் மற்றும் உபகரணங்களைத் திருடிச் சென்றுள்ளதாக கல்லூரியின் அதிபர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த அதே பாடசாலையில் 10ஆம் தரத்தில் கல்வி கற்கும் 17 வயதுடைய மாணவர் ஒருவரே அவற்றைத் திருடியுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர். சந்தேக நபரின் வீட்டை சோதனையிட்டபோது, வீட்டின் மேல் மாடியில் 2 கணினிகள் மற்றும் அது தொடர்பான உபகரணங்களை உரப் பை ஒன்றினுள் கட்டி மறைத்து வைத்திருந்ததை பொலிஸார கண்டுபிடித்துள்ளனர். இதனையடுத்து மேற்படி மாணவன் கைது செய்யப்பட்டு பொலிஸ் விசாரணையின் பின்னர் மொரவக்க மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 31 ஆம் திகதி வரை காவலில் வைக்கப்பட்டார். (ரெ-19)

# இங்கிலாந்தை 8 விக்கெட்டுகளால் வீழ்த்தி இலங்கை அபார வெற்றி!



உலக கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்றைய தினம் பெங்களூருவில் நடைபெற்ற இங்கிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையிலான போட்டியில் இலங்கை அணி 8 விக்கெட்டுக்களால் அபாரமான வெற்றியைப் பெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட்டத்தைத் தெரிவு செய்து களமிறங்கியது. இலங்கையணியின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாத அவ்வணி, 33.2 ஓவர்களிலேயே சகல விக்கெட்டுக்களையும் இழந்து 156 ஓட்டங்களையே பெற்றது.

இங்கிலாந்து அணியின் பென் ஸ்டோக்ஸ் 43 ஓட்டங்களையும் ஜொனி பேர்ஸ்டோ 30 ஓட்டங்களையும் சேர்த்திருந்தனர். இலங்கையணியின் லஹிரு குமார 3 விக்கெட்டுகளையும் அஞ்சலோ மத்யூஸ், கசுன் ராஜித ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் மகேஷ் தீக்சன ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து, தொடர்ந்து 157 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 25.4 ஓவர்களிலேயே 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இலங்கையணியின் பத்தும் நிசங்க 77 ஓட்டங்களையும் சதீர சமரவிக்ரம 65 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்று வெற்றியை உறுதிப்படுத்தினர். போட்டியின் ஆட்ட நாயகனாக லஹிரு குமார தெரிவுசெய்யப்பட்டார். (04)


JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP
FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குருசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.10.2023இல் வெளியிடப்பெற்றது.